1978 செப்டம்பர் 7]

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப் பெற்றிருக்கிறது.

[முற்பகல் 10.30]

(6) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—(தொடர்ச்சி)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தின் மீது என்னுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இங்கே ஆளுநர் உரையை நான் மிகவும் கவனமாகப் படித்துப் பார்த்தேன். இந்த ஆளுநர் உரையில் கடந்த ஆண்டு என்ன கருத்துக்கள் சொல்லப்பட்டனவோ அதே கருத்துக்கள்தான் திரும்பவும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதிலே புதிய அம்சங்கள் இல்லை. சினிமாக்காரர்கள் பாணியில் சொல்ல வேண்டுமானால், இந்த ஆளுநர் உரை பழைய படம், ஆனால் புதிய காப்பி என்று சொல்வதைத் தவிர வேறொன்றும் இல்லை.

மதுரைப் பல்கலைக் கழகத்திற்குத் தியாக தீபம் காமராஜ் அவர்களுடைய பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திற்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். இவைகளை நான் வரவேற்கிறேன். ஆனால் பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாடுகின்ற இந்தச் சூழ்நிலையில் தந்தை பெரியார் அவர்களின் பெயரை சென்னைப் பல்கலைக் கழகத்திற்குச் சூட்ட வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இஸ்மாயில் கமிஷன் தீர்ப்பின்மீது நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாக ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இஸ்மாயில் கமிஷன், குற்றவாளிகள் என்று தெளிவாகச் சொல்லியிருக்கும் பல அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. குறிப்பாக திரு. கிருஷ்ணசாமி, அடிஷனல் ஐ. ஜி. அவர்களுக்கு பிரசிடெண்ட் அவார்ட் கிடைப்பதற்கு இந்தச் சர்க்காரே சிபாரிசு செய்திருப்பது எந்தவிதத்தில் நியாயமாக இருக்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன். கேரளாவில இராஜன் கொலைவழக்கில் சம்பந்தப்பட்ட எல்லா போலீஸ் அதிகாரிகளையும் கேரள அரசு வேலை நீக்கம் செய்து அவர்கள்மீது கிரிமினல் வழக்கு தொடர்ந்து, நீதிமன்றம் அவர்களில் பலரைக் குற்றவாளிகள் என்று அறிவித்தது. இங்கேயும், கேரள அரசைப் பின்பற்றி, இஸ்மாயில் கமிஷனால் கொடுக்கப்பட்டிருக்கின்ற உண்மையான குற்றவாளிகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையில், மாநிலங்களுக்கு அதிக நிதி ஆதாரங்கள் வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன். ஆனால் மாநிலங்களுக்கு அதிக நிதி ஆதாரங்கள் மட்டும் கிடைத்தால் போதாது. முப்பதாண்டுக் காலத்திற்கு முன்பாக இந்திய அரசியல் நிர்ணய மன்றத்தில் ஒருவர் தெளிவாகச் சொன்னார், மாநிலங்கள் 'குலோரிபைட் முனிசிபாலிடிகளாக', ''அலங்கரிக்கப்பட்ட நகராட்சிகளாக'' இருக்கின்றன என்று. இப்பொழுதும் அப்படித்தான் இருக்கிறது. ஸ்ரீரங்கத்தைத் திருவரங்கம் என்றும், ஸ்ரீவில்லிப்புத்தூரை திருவில்லிப்புத்தூர் என்றும் மாற்றுகின்ற அதிகாரம்கூட மாநில அரசுக்கு இல்லை. எனவே, அண்ணாவின் மாநில சுயாட்சிக்காக இந்தச் சர்க்கார் போராட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆட்சியில் முதலமைச்சரை புரட்சித் தலைவர் என்று விமரிசிக்கப்படுகிறது. ஆகவே, இந்த ஆளுநர் உரையில் புரட்சித் திட்டங்கள் ஏதாவது இருக்குமா என்று பார்த்தேன். முதலமைச்சரவர்கள் பல திட்டங்களை அறிவித்தார்கள். விபச்சார ஒழிப்புத் தடைச் சட்டத்தைக் கொண்டு வருவோம் என்று சொன்னார்கள். விபச்சாரம் செய்வது இங்கே சிறப்பாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆண்தான் பெண்ணுக்குப் பணம் கொடுக்கிறான், எந்தப் பெண்ணும் ஆணுக்குப் பணம் கொடுக்கிறார்களா என்று சொல்லி விட்டு, ஆண்களையும், தண்டிக்க வேண்டுமென்று சொன்னார்கள். முதல் தடவை பெண் விபச்சாரம் செய்தால் மன்னிப்பு என்றும், இரண்டாவது தடவை அவள் விபச்சாரம் செய்தால் அபராதம் என்றும், மூன்றாவது தடவை அவள் விபச்சாரம் செய்தால் சிறைச்சாலை என்றும், அதேபோல் ஆண் முதல் தடவை விபச்சாரம் செய்தால் சிறை என்றும் சட்டம் கொண்டு வரப் போகிறோம் என்று சொன்னார்கள். அந்தச் சட்டத்தைப் பற்றி ஆளுநர் உரையில் எந்தக் குறிப்பும் இல்லை.

அதேபோன்று, 'ரைட் டு ரீ-கால்' என்று முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தவறு செய்தால் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் அந்த மக்களுக்கு இருக்க வேண்டுமென்றும், அதுதான் மக்கள் சுயாட்சி என்றும் சொன்னார்கள். அதுபற்றி ஏதாவது இருக்கிறதா என்றால் இல்லை. இது வெறும் கண் சிமிட்டுகின்ற காகிதப் பூவாகத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அரிசி ஆலைகள் தேசிய மயமாக்கப்படும், விவசாயிகளுக்கு மாதச் சம்பளம் வழங்கப்படும், விவசாயிகளுக்கு போனஸ் வழங்கப்படும், பயிர் இன்ஷ்யூரன்ஸ் திட்டம் கொண்டு வரப்படும், 10,000 பேர் வேலையில் நியமிக்கப்படுவார்கள், ஒரு இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு தரப்படும், அரசு மருத்துவர்கள் தனியாகத் தொழில் நடத்துவதற்குத் தடைச் சட்டம் கொண்டு வரப்படும் என்றெல்லாம் சொன்னார்கள். அவைகளெல்லாம் என்னவாயின? இந்தத் திட்டங்களுக்கெல்லாம் மரணம் சம்பவித்துவிட்டதா?

1978 செப்டம்பர் 7] [திரு. அ. ரகுமான்கான்]

ஆனல், திரும்பத் திரும்ப ஆளுநர் உரையில் பட்டுப் புழு வளர்ப்பதைப் பற்றியும், பால் அதிகமாக உற்பத்தி செய்யப் படுவதைப் பற்றியும், காடு வளர்ப்பதைப்பற்றியும், பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்குவதைப்பற்றியும், மின்னிணைப்பு தருவதில் தீவிரமாகப் போகப் போகிறோம் என்பதைப்பற்றியும், மருத்துவ மனைகள் இல்லாத ஊர்களுக்கு மருத்துவமனைகள் அமைப்பது பற்றியும், மருத்துவக் குழுக்கள் அமைப்பது பற்றியும், டி. எல். லைசென்ஸ் தனியாருக்குத் தர மாட்டோம் என்பது பற்றியும் இப்படிப்பட்ட அதிகாரிகள் செய்யக்கூடிய நிர்வாக நடவடிக்கை களைத்தான் சாதனை என்று சொல்கிறார்கள்.

அடுத்து ஒரே பாணி, ஒரே ராகம் என்று சொல்வதைப்போல், to root out corruption at all levels எல்லா மட்டத்திலும் இலஞ்சத்தை ஒழிப்போம் என்று சொல்கிறார்கள், ஆனல் இந்தப் புனித ஆட்சியில் இலஞ்சம் ஒழிக்கப்படவில்லை என்பதை நான் இங்கே ஆதாரத்தோடு சொல்லிக்கொள்ள முடியும்.

* * *

(7) அறிவிப்பு.

பிரஞ்சு நாஷனல் அசெம்பளி உறுப்பினர்கள் நிகழ்ச்சிகளைக் கண்ணுறுதல்

Mr. SPEAKER: I have to announce to the House that five Members from the French National Assembly are now witnessing the proceedings of this House from the Speaker's Gallery. I have great pleasure in extending to them the warm welcome of this House.

(மாண்புமிகு உறுப்பினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர்)

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—(தொடர்ச்சி)

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு தலைவரவர்களே,

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவையிலே இருக்கிற மற்றொரு உறுப்பினரைப்பற்றித்தான் குற்றம் சாட்டுகிறீர்கள். நம்முடைய அவையிலே கடைபிடித்துவரும் மரபை கனம் உறுப் பினர் பின்பற்றத் தவறிவிட்டார் என்று கருதுகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.